# செய்யுள்திரட்டு

2010-2011 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது
நான்காம் பருவம்

பகுதி I தமிழ்

இளங்கலை - அறிவியல் பட்டப்படிப்பில் இரண்டாமாண்டு, தமிழ் பயில்வோர்க்குரியது
(இளநிலை (UG) பட்டவகுப்பு மாணவர்குரியது)

தொகுப்பு

முனைவர் அ.சிவசுப்பிரமணியன்
.

பதிப்பு
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 046

## அறிமுகவுரை

பள்ளிக் கல்வி நிறைவடைந்து பல்கலைக்கழகக் கல்விக்கு வரும் பட்டவகுப்பு மாணவர்தம் கருத்துப் பரிமாற்றத்திறன், (Communicative Skill) சிந்தனைத்திறன், ஆளுமைத்திறன் ஆகியனவற்றை வளர்த்து, வாழ்வியல் விழுமியங்களை உணரச் செய்து, தேசிய உலக ஒருமைப் பாட்டுணர்வை மனத்தில் இருத்தி வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நேர்முக எண்ணம் (Positive thinking) வலுப்பெறும் வகையில் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நான்காம் பருவத்தில் செய்யுள், நாடகம், இலக்கணம் இலக்கியவரலாறு, படைப்பிலக்கியப் பயிற்சி என்பன தரப்பட்டுள்ளன. இந்நூலை மாணவர்கள் நன்கு கற்றுப் பயன்பெறுவார்களாக.

தற்கால மாணவர் நிலையைக் கருத்தில் கொண்டு பகுதி I தமிழ் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும், கருத்துப் பரிமாற்றத் திறனுக்கும் மானுடச் சிறப்பிற்கும் முதன்மையிடம் அளிக்க வேண்டும் என்றும் மிகுந்த ஆர்வத்துடன் ஊக்கப்படுத்தி அதற்கான செயற்பாட்டுப் பொறுப்பை ஏற்றுப் பல்லாற்றானும் உதவிய மேன்மைமிகு துணைவேந்தர் அவர்களுக்கும், பட்ட வகுப்பு மாணவர்களின் தமிழ்மொழி ஆற்றலை வளர்க்கவும், இலக்கியங்களின் நுவல் பொருளை உணர்ந்து பின்பற்றவும், தமிழர்களின் பண்பாட்டை உணர்ந்து கொள்ளவும் ஏற்றவகையில் பாடத்திட்டத்தை வடிவமைத்த பாடத்திட்டக் குழுவினருக்கும், இப்பாடத்திட்டத்தில் எடுத்தாண்டுள்ள இலக்கியப் படைப்பாளர்களுக்கும், அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

**பாடத்திட்டக் குழுவினர்**

# பாடத்திட்டம்
## நான்காம் பருவம்
(செய்யுள், நாடகம், இலக்கணம், இலக்கிய வரலாறு, படைப்பிலக்கியப் பயிற்சி)

**அலகு - 1 அன்பும் பண்பும்**

குறுந்தொகை - 5 பாடல்கள் (41, 57, 58, 61, 65)

நற்றிணை - 2 பாடல்கள் (65, 279)

அகநானூறு - 2 பாடல்கள் (14, 43)

கலித்தொகை - 2 பாடல்கள் (குறிஞ்சிக்கலி - பா.எண் 16, நெய்தற்கலி - பா.எண் 20 )

**அலகு - 2 வீரம், கொடை, பக்தி**

**புறநானூறு :** 1) ஔவயார் - பாடல் எண் : 206 (வாயிலோயே)

2) காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடல் எண் : 278 (நரம்பு எழுந்த)

3) மாறோக்கத்து நப்பசைலையார் பாடல் எண் : 280 (என்னை மார்பில்)

**பத்துப்பாட்டு :** சிறுபாணாற்றுப்படை (முழுமையும்)

**பரிபாடல் :** திருமால் பற்றியது (3 ஆம் பாடல்)

**அலகு - 3 படைப்புத்திறன்**

**நாடகம் :** ஔவை - இன்குலாப்

**அலகு - 4 பொருள் புலப்பாட்டுத்திறன்**

**இலக்கணம் :** அகத்திணை
புறத்திணை
திணை துறைப்பொருத்தமும்
விளக்கமும்

**அலகு - 5 இலக்கியவரலாறு : பாடத்திட்டத்தைத் தழுவியது**

எட்டுத்தொகை
பத்துப்பாட்டு
பதினெண்கீழ்க்கணக்கு
தமிழ்நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**படைப்பிலக்கியப்பயிற்சி**

ஓரங்க நாடக உருவாக்கம்
சிறுகதை உருவாக்கம்
கவிதை உருவாக்கம்
நூல் மதிப்பீட்டுப் பயிற்சி.

நான்காம் பருவம்

## வினாத்தாள் அமைப்பு

நேரம் 3 மணி மொத்த மதிப்பெண்கள்: 75

**பிரிவு - அ**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும் 10 x 1 = 10

**பிரிவு - ஆ**

இரு பக்க அளவில் விடை எழுதுக 5 x 5 = 25

செய்யுள் - 2 வினாக்கள்

நாடகம் - 1 வினா

இலக்கணம் - 1 வினா

இலக்கிய வரலாறு - 1 வினா

**பிரிவு - இ**

கட்டுரை வடிவில் விடை எழுதுக 5 x 8 = 40

செய்யுள் - 2 வினாக்கள்

நாடகம் - 1 வினா

இலக்கியவரலாறு - 1 வினா

படைப்பிலக்கியம் - 1 வினா

குறிப்பு - ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் ‘இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல்வேண்டும்.

******************

# அலகு- 1

## 1. குறுந்தொகை

### பாலை

காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து,
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் - தோழி! அவர் அகன்ற ஞான்றே. (பா.எண்- 41)

பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது

- அணிலாடு முன்றிலார்

### நெய்தல்

"பூ இடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு,
உடன்உயிர் போகுகதில்ல - கடன் அறிந்து,
இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே" (பா.எண் - 57)

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள், தோழிக்குச் சொல்லியது

- சிறைக்குடி ஆந்தையார்

### குறிஞ்சி

இடிக்கும் கேளிர்! நும்குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல!
பரந்தன்று, இந்நோய்; நோன்று கொளற்கு அரிதே! (பா.எண்- 58)

கழற்றெதிர் மறை,

- வெள்ளி வீதியார்

### மருதம்

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையில்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல,
உற்று இன்புறேஎம் ஆயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம், செறிந்தன வளையே. (பா.எண் - 61)

தோழி, தலைமகன் வாயில்கட்டு உரைத்தது.

- தும்பிசேர் கீரன்

### முல்லை

வன் பரற் தெள் அறல் பருகிய இரலை தன்
இன்புறு துணையொடு மறுவந்து உகள,
தான் வந்தன்றே, தளிதரு தண்கார்-
வாராது உறையுநர் வரல் நசைஇ
வருந்தி நொந்து உயை இருந்திரோ எனவே. (பா.எண்-65)

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

- கோவூர் கிழார்

## 2. நற்றிணை

### குறிஞ்சி

அமுதம் உண்க, நம் அயல் இலாட்டி!
கிடங்கில் அன்ன இட்டுக் கரைக் கான் யாற்றுக்
கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ,
ஒளிறு வெள் அருவி ஒண் துறை மடுத்து,
புலியொடு பொருத புண் கூர் யானை
நற் கோடு நயந்த அன்பு இல் கானவர்
விற் கழிப்பட்ட நாமப் பூசல்
உருமிடைக் கடிஇடி கரையும்
பெரு மலை நாடனை வரூஉம் என்றோளே (பா.எண் - 65)

கூற்று: இது விரிச்சி பெற்றுப் புகன்ற தோழி தலைமகளுக்குச் சொல்லியது.

- கபிலர்

### பாலை

வேம்பின் ஒண் பழம் முணைஇ, இருப்பைத்
தேம் பால் செற்ற தீம் பழம் நசைஇ,
வைகு பனி உழந்த வாவல், சினைதொறும்,
நெய் தோய் திரியின் தண் சிதர் உறைப்ப,
நாட் சுரம் உழந்த வாள் கேழ் ஏற்றையொடு
பொரு யானைப் புட் தாள் ஏய்ப்ப,
பிசிப் பிடி உதைத்த ஓமைச் செவ் அரை
வெயில் காய் அமையத்து இமைக்கும் அத்தத்து,
அதர் உழந்து அசையினகொல்லோ - ததர்வாய்ச்
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே? (பா.எண்-279)

கூற்று: மகட்போக்கிய தாய் சொல்லியது

- கயமனார்

## *3.* அகநானூறு

### பாலை

கடல் முகந்து கொண்ட கமஞ் சூல் மா மழை
சுடர் நிமிர் மின்னோடு வலன் ஏர்பு, இரங்கி,
என்றூழ் உழந்த புன் தலை மடப் பிடி
கை மாய் நீத்தம் களிற்றொடு படீஇய,
நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி,
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர் மருங்கு அறியாது, அஞ்சுவரப் பாஅய்,
தளி மயங்குகின்றே தண் குரல் எழிலி; யாமே
கொய் அகை முல்லை காலொடு மயங்கி,
மை இருங் கானம் நாறும் நறு நுதல்,
பல் இருங் கூந்தல், மெல் இயல் மடந்தை
நல் எழில் ஆகம் சேர்ந்தனம், என்றும்
அளியரோ அளியர்தாமே - அளி இன்று
ஏதில் பொருட்பிணிப் போகி, தம்
இன் துணைப் பிரியும் மடமையோரே! (பா.எண்-43)

கூற்று: தலைமகன் பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது

- மதுரையாசிரியர் நல்லந்துவனார்

### முல்லை

அரக்கத்து அன்ன செந் நிலப் பெரு வழி,
காயாஞ் செம்மல் தாஅய், பல உடன்
ஈயல் மூதாய் வரிப்ப, பவளமொடு
மணி மிடைந்தன்ன குன்றம் கவைஇய
அம் காட்டு ஆர் இடை, மடப் பிணை தழீஇ,
திரி மருப்பு இரலை புல் அருந்து உகள,
முல்லை வியன் புலம் பரப்பி, கோவலர்
குறும் பொறை மருங்கின் நறும் பூ அயர,
பதவு மேயல் அருந்து மதவு நடை நல் ஆன்
வீங்கு மாண் செருத்தல், தீம் பால் பிலிற்ற,
கன்று பயிர் குரல, மன்று நிறை புகுதரும்
மாலையும் உள்ளார் ஆயின், காலை
யாங்கு ஆகுவம் கொல்? பாண!' என்ற
மனையோள் சொல் எதிர் சொல்லல்செல்லேன்,
செவ்வழி நல் யாழ் இசையினென், பையென,
கடவுள் வாழ்த்தி, பையுள் மெய்ந் நிறுத்து,
அவர் திறம் செல்வேன் கண்டனென், யானே-
விடு விசைக் குதிரை விலங்கு பரி முடுக,
கல் பொருது இரங்கும் பல் ஆர் நேமிக்
கார் மழை முழக்கு இசை கடுக்கும்,
முனை நல் ஊரன், புனை நெடுந் தேரே (பா.எண்-14)

கூற்று: பாணன் தனக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

- ஒக்கூர் மாசாத்தனார்

## 4. கலித்தொகை
## குறிஞ்சிக்கலி

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெத்து,
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குரங்குஅறுத் திடுவான்போல், கூர்நுதி மடுத்து, அதன்
நிறம்சாடி முரண்தீர்ந்த நீள்மருப்பு, எழில் யானை,
மல்லரை மறம்சாய்த்த மால்போல், தன் கிளைநாப்பண்,
கல்லுயர் நனம்சாரல், கலந்து இயலும் நாட! கேள் :
தாமரைக் கண்ணியைத், தண்நறும் சாந்தினை,
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீ வரின்,
மணம் கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கு என அஞ்சுவர், சிறுகுடி யோரே.
ஈர்ந்தண் ஆடையை, எல்லி மாலையை
சோர்ந்து வீழ் கதுப்பினாள் செய்குறி நீ வரின்,
ஒளிதிகழ் ஞெகிழியர்; கவணையர், வில்லர்,
'களிறு' என ஆர்ப்பவர்; ஏனல்கா வலரே.
ஆர மார்பினை, அண்ணலை, அளியை
ஐதுஅகல் அல்குலாள் செய்குறி நீ வரின்,
கறிவளர் சிலம்பில் வழங்க லானாப்
புலி என்று ஓர்க்கும், இக் கலிகேழ் ஊரே.
என வாங்கு-
விலங்கு ஓரார், மெய்ஓர்ப்பின், இவள் வாழாள், இவளன்றிப்
புலம்புகழ் ஒருவ! யானும் வாழேன்;
அதனால், பொதி அவிழ் வைகறை வந்து; நீ குறைகூறி,
வதுவை அயர்தல் வேண்டுவல்; ஆங்குப்,
புதுவை போலும் நின்வரவும், இவள்
வதுவை நாண் ஒடுக்கமும், காண்குவல் யானே. (பா.எண் - 16)

எவ்வளவுதான் பழகியிருந்தாலும், பலரும் காணக் கல்யாண நாளிலே தன் காதலனருகே இருக்கும்போது, மணப் பெண்ணுக்கு வெட்கம் தானாகவே வந்து விடுகிறது. இரவு வேளையில் மறைவாகத் தன் காதலியைக் காண வந்தவனிடம், திருமணத்திற்கு விரைவிலே ஏற்பாடு செய்யுமாறு கூறும் தோழி, இப்படி நயமாகக் கூறுகின்றாள்.

- கபிலர்

## நெய்தற்கலி

அரிதே, தோழி! நாண் நிறுப்பாம் என்றுணர்தல்
பெரிதே காமம்; என் உயிர் தவச் சிறிதே:
பலவே யாமம் ; பையுளும் உடைய
சிலவே, நம்மோடு உசாவும் அன்றில்;
அழலவிர் வயங்கிழை ஒலிப்ப, உலமந்து,
எழில் எஞ்சு மயிலின் நடுங்கிச், சேக்கையின்
அழலாகின்று, அவர் நக்கதன் பயனே,
மெல்லிய நெஞ்சு பையுள் கூரத், தம்
சொல்லினான் எய்தமை அல்லது, அவர் நம்மை
வல்லவன் தைஇய வாக்கமை கடுவிசை
வில்லினான் எய்தலோ இலர்மன்: ஆயிழை!
வில்லினும் கடிது, அவர் சொல்லினுள் பிறந்த நோய்,
நகைமுதலாக, நட்பினுள் எழுந்த
தகைமையில் நலிதல் அல்லது, அவர் நம்மை
வகைமையின் எழுந்த தொன்முரண் முதலாகப்,

பகைமையின் நலிதலோ இலர்மன்; ஆயிழை!
பகைமையிற் கடிது, அவர் தகைமையின் நலியும் நோய்,
'நீயலேன்' என்று என்னை அன்பினால் பிணித்துத், தம்
சாயலின் சுடுதல் அல்லது, அவர் நம்மைப்
பாயிருள் அறநீக்கும் நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினால் சுடுதலோ இலர்மன்; ஆயிழை!
தீயினும் கடிதுஅவர் சாயலிற் கனலும் நோய்.
ஆங்கு -
அன்னர் காதலராக, அவர் நமக்கு
இன்னுயிர் போத்தரும் மருத்துவ ராயின்,
யாங்கா வது கொல்? - தோழி! - எனையதூஉம்,
தாங்குதல் வலித்தன்று ஆயின்,
நீங்கரிது உற்றன்று, அவர் உறீஇய நோயே. (பா.எண் - 20)

தலைவன், தலைவியைப் பிரிந்து அவளை மறந்துவிட்டான், ஆற்றாத நோயால் புலம்பும் தலைவி, தன் நிலைமையைத் தன் தோழியிடம் விவரித்துக் கூறுகின்றாள். பேச்சிலே உள்ளத்திற் கனலும் அனல் அப்படியே வீசுகிறது.

- நல்லந்துவனார்

## புறநானூறு

வாயிலோயே! வாயிலோயே !
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்அறியலன் கொல் ? என்அறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே அதனால்
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை

மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே! (பா.எண் - 206)

- ஔவையார்

நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலைஅறுத் திடுவன் யான்எனச் சினைஇக்

கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே! (பா.எண்-278)

- காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்

என்னை மார்பில புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்

நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்ஆ குவிர்கொல் அளியீர் நுமக்கும்
இவண்உறை வாழ்க்கையோ அரிதே யானும்

மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதாம் உடுத்த வம்பகைத் தெரியல்
சிறுவெள் ஆம்பல் அல்லி உண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந்து இருத்தல் அதனினும் அரிதே. *(பா.எண்-280)*

- மாறோக்கத்து நப்பசலையார்

## சிறுபாணாற்றுப்படை
## வேனிற்காலம்

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போல,
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில் குயில்குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிபுடை நெறித்து,
கதுப்பு விரித்தன்ன காழ்அக நுணங்குஅறல்
அயில்உருப் பனைய ஆகி, ஐதுநடந்து,
வெயில் உருப் புற்ற வெம்பரல் கிழிப்ப,
வேனில் நின்ற வெம்பத வழிநாள்
காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்ப,
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன் முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ

## அழகுமிக்க விறலியருடன்
## இளைப்பாறும் இரவலன்

ஐதுவீழ இகுபெயல் அழகுகொண்டு, அருளி,
நெய்கனிந்து இருளிய கதுப்பின் ; கதுப்புஎன,
மணிவயின் கலாபம், பரப்பி, பலஉடன்
மயில், மயிற் குளிக்கும் சாயல் ; சாஅய்
உயங்குநாய் நாவின் நல் எழில் அசைஇ,
வயங்குஇழை உலறிய அடியின் ; அடிதொடர்ந்து,
ஈர்ந்துநிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின்,
சேர்ந்து உடன் செறிந்த குறங்கின், குறங்கு என,
மால்வரை ஒழுகிய வாழை; வாழைப்

பூஎனப் பொலிந்த ஓதி ; ஓதி,
நளிச்சினை வேங்கை நாள்மலர் நச்சி,
களிச்சுரும்பு அரற்றும் சுணங்கின், சுணங்குபிதிர்ந்து,
யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளி,
பூண்அகத்து ஒடுங்கிய வெம்முலை ; முலைஎன,
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சேறு இருதரும் எயிற்றின்; எயிறுஎன,
குல்லைஅம் புறவில் குவிமுகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின்; மெல்இயல் ;
மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்
நடைமெலிந்து அசைஇய நல்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவர,
பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,
நைவளம் பழுநிய நயம் தெரி பாலை
கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனிகூர் எவ்வமொடு துயர்ஆற்றுப் படுப்ப,
முனிவு இகந்திருந்த முதவாய் இரவல!

### வஞ்சி மாநகரின் சிறப்பு

கொழுமீன் குறைய ஒதுங்கி, வள்இதழ்க்
கழுநீர் மேய்ந்த கடவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல்இலை மயிர்ப்புறம் தைவர,
விளையா இளங்கள் நாற, மெல்குபு பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலம் காவலர் மருமான் ஒன்னார்
வடபுல இமயத்து, வாங்குவிற் பொறித்த
எழுஉறழ் திணிதோள், இயல்தேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில்வஞ்சியும் வறிதே; அதாஅன்று,

### தமிழ் நிலை பெற்ற மதுரையின் மாண்பு

நறவுவாய் உறைக்கும் நாகுமுதிர் நுணவத்து
அறைவாய்க் குறுந்துணி அயில்உளி பொருத
கைபுனை செப்பம் கடைந்த மார்பின்,
செய்பூங் கண்ணி செவிமுதல் திருத்தி,
நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்
நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,
தோள்புறம் மறைக்கும், நல்கூர் நுகப்பின்,
உளர்இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்
தத்துநீர் வரைப்பின் கொற்கைக் கோமான் ;
தென்புலம் காவலர் மருமான்; ஒன்னார்
மண்மாறு கொண்ட, மாலை வெண்குடை,
கண்ஆர் கண்ணி, கடுந்தேர்ச செழியன்;
தமிழ் நிலை பெற்ற, தாங்கு அரு மரபின்
மகிழ்நனை, மறுகின் மதுரையும் வறிதே; அதா அன்று,

## உறந்தையின் சிறப்பு

நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணைஆர்கோதை,
ஓவத்து அன்ன உண்துறை மருங்கில்
கோவத்து அன்ன கொங்குசேர்பு உறைத்தலின்,
வருமுலை அன்ன வண்முகை உடைந்து,
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை,
ஆஇல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை,
ஏம இன் துணை தழீஇ, இறகுஉளர்ந்து,
காமரு தும்பி காமரம் செப்பும்
தண்பணை தழீஇய தளரா இருக்கைக்
குணபுலம் காவலர் மருமான் ஒன்னார்
ஓங்குஎயிற் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்குஎயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை,
நாடா நல்இசை, நல்தேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே; அதாஅன்று

## ஏழு வள்ளல்களின் சிறப்பு

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்,
பெருங்கல் நாடன், பேகனும்; கரும்புஉண
நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய,
பிறங்கு வெள்அருவி வீழும் சாரல்
மறம்பின் கோமான், பாரியும்; கறங்குமணி
வால்உளைப் புரவியோடு வையகம், மருள,
ஈர நல்மொழி இரவலர்க்கு ஈந்த,
அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்,
கழல்தொடித் தடக்கை, காரியும்; நிழல்திகழ்,
நீல, நாகம் நல்கிய, கலிங்கம்
ஆல்அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த,
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்,
ஆர்வ நன்மொழி, ஆயும்; மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்,
அரவக் கடல்தானை, அதிகனும்; கரவாது,
நட்டோர் உவப்ப, நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த, முனைவிளங்கு தடக்கை,
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன், நள்ளியும்; நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்து,
குறும்பொறை, நல்நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை, ஓரியும்; என ஆங்கு,
எழுசமம் கடந்த எழுஉறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்,

## நல்லியக் கோடனின் தலைமைச் சிறப்பு

விரிகடல் வேலி வியலகம் விளங்க,
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்
நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறைஆடு மகளிர்க்குத் தோட்புணை ஆகிய
பொருபுனல் தரூஉம், போக்கு அரு மரபின்,
தொல்மா இலங்கை கருவொடு பெயரிய
நல்மா இலங்கை மன்ன ருள்ளும்,
மறுஇன்றி விளங்கிய வடுஇல் வாய்வாள்,
உறுபுலித் துப்பின், ஓவியர் பெருமகன்
களிற்றுத் தழும்பு இருந்த கழல்தயங்கு திருந்துஅடி,
பிடிக்கணம் சிதறும் பெயல்மழைத் தடக்கை,
பல்இயக் கோடியர் புரவலன் பேர்இசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு,

## புரவலனிடம் பரிசு பெறச் சென்ற விதம்

தாங்கு அரு மரபின் தன்னும், தந்தை
வான்பொரு நெடுவரை வளனும், பாடி,
முன்நான் சென்றனம் ஆக.

## வருத்தம் போக்கிய வண்மைச் சிறப்பு

........... ................. .............. ...................... இந்நாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது,
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர், முதுசுவர்க் கணச்சிதல் அரித்த,
பூழி பூத்த புழல்காளாம்பி;
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்,
வளைக்கை, கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேலை உப்புஇலி வெந்ததை,
மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீட; பொழிகவுள்,
தறுகண் பூட்கை, தயங்குமணி மருங்கின்,
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி;
யாம் அவண் நின்றும் வருதும்.

## எயிற்பட்டினத்தில் கிடைக்கும் பொருள்கள்

........... ................. .............. ...................... நீயிரும்,
இவண்நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு, செல்குவிர் ஆயின்,
அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்,
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்,
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண்மணல் கடல்உலாய் நிமிர்தர,

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி,
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய,
பணிநீர்ப் படுவின், பட்டினம் படரின்
ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்
கரும்புகைச் செந்தீ மாட்டி, பெருந்தோள்,
மதியேக்கறூஉம் மாசுஅறு திருமுகத்து,
நுதிவேல் நோக்கின், நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளைஅவிழ் தெரியல் தகையோற் பாடி,
அறற்குழல் பாணி தூங்கி யவரோடு,
வறற்குழற் சூட்டின், வயின்வயின் பெறுகுவிர்:

## வேலூர் வளமும் எயினர் விருந்தும்

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்,
கருநனைக் கணமயில் அவிழவும்,
கொழுங்கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்,
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்,
கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்,
முல்லை சான்ற முல்லைஅம் புறவின்,
விடர்கால் அருவி வியல்மலை மூழ்கிச்
சுடர்கால் மாறிய செவ்வி நோக்கி,
திறல்வேல் நுதியின் பூத்த கேணி,
விறல்வேல் வென்றி, வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்புஅவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு,
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்.

## ஆமூர் வளமும் உழவர் விருந்தும்

நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்பர் ஏறி,
நிலைஅருள் குட்டம் நோக்கி, நெடிதுஇருந்து,
புலவுக் கயலெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்உகிர் கிழித்த வடுஆழ் பாசடை,
முள்அரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசேர் அரவின் மானத்தோன்றும்
மருதம் சான்ற மருதத் தண்பணை,
அந்தணர் அருகா, அருங்கடி வியல்நகர்,
அம்தண் கிடங்கின், அவன்ஆமூர் எய்தின்
வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை,
பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்து,
தொடிக்கை மகடூஉ., மகமுறை தடுப்ப,
இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு,
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவிர்.

## நல்லியக்கோடனின் மூதூர் அண்மையது என்று அறிவித்தல்

எரிமறிந் தன்ன நாவின், இலங்குஎயிற்று
கருமறிக் காதின், கவைஅடிப் பேய்மகள்
நிணன்உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன்உகைத்துச் சிவந்த பேர்உகிர், பணைத்தாள்
அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப,
நீறுஅடங்கு தெருவின் அவன்சாறு அயர்மூதூர்
சேய்த்தும் அன்று ; சிறிது நணியதுவே.

## வாயிலின் சிறப்பு

பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்,
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்,
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன,
அடையா வாயில் அவன்அருங் கடைகுறுகி

## நல்லியக்கோடான் அவையில் வீற்றிருக்கும் காட்சி - அவன் குணங்களும் அவற்றை ஏத்துவோரும்

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,
செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த;
அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்,
ஆண்அணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த;
கருதியது முடித்தலும், காமுறப் படுதலும்,
ஒருவழிப் படாமையும் ஓடியது உணர்தலும்,
அரிஏர் உண்கண் அரிவையர் ஏத்த;
அறிவுமடம் படுதலும், அறிவுநன்கு உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த;
பல்மீன் நடுவண் பால்மதி போல,
இன்நகை ஆயமொடு இருந்தோற் குறுகி

## யாழ் வாசித்து, அரசனைப் புகழ்ந்து பாடுதல்

பைங்கண் ஊக்கம் பாம்பு பிடித்தன்ன,
அம்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்;
மணிநிரைத் தன்ன வனப்பின் ; வாய்அமைத்து,
வயிறுசேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து,
கானக் குமிழின் கனிநிறம் கடுப்ப,
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து,
அமிழ்து பொதிந்து இலிற்றும், அடங்குபுரி நரம்பின்;
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்இயம் குரல் குரல் ஆக,
நூல்நெறி மரபின், பண்ணி, ‘ஆனாது’
‘முதுவோர்க்கு முகிழ்த்த கையினை’ எனவும்,
‘இளையோர்க்கு மலர்ந்த மார்பினை’ எனவும்,
‘ஏரோர்க்கு நிழன்ற கோலினை’ எனவும்,
‘தேரோர்க்கு அழன்ற வேலினை’ எனவும்,
நீசில மொழியா அளவை -

### பாணர் முதலியோர்க்கு அவன் உண்டி முதலியன கொடுத்தல்

................ ................ ................ ................ மாசுஇல்,
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ,
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
காஎரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்,
பனிவரை மார்பன், பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்,
வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி,
ஆனா விருப்பின், தான்நின்று ஊட்டி,

### நல்லியக்கோடன் அளிக்கும் பரிசில்

திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புலம் அகற்றி,
விறல்வேல் மன்னர் மன்எயில் முருக்கி,
நயவர், பாணர், புன்கண் தீர்த்தபின்,
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு;
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி ஊர்கொண் டாங்கு,
கூர் உளி பொருத வடுஆழ் நோன்குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு,
சிதர்நனை முருக்கின் சேண்ஓங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள்அரக்கு எறிந்த உருக்குறு போர்வை,
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி,
ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்
வாள்முகப் பாண்டில் வலவனொடு; தரீஇ,
அன்றே விடுக்கும்அவன் பரிசில் -

### நல்லியக்கோடானது புகழும் பண்பும்

....................... ................... ................... மென்தோள்,
துகில் அணி அல்குல், துளங்குஇயல் மகளிர்
அகில்உண விரித்த அம்மென் கூந்தலின்,
மணிமயில் கலாபம் மஞ்சுஇடைப் பரப்பி,
துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு,
எறிந்துஉரும் இறந்த ஏற்றுஅருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான், கொய்தளிர்க் கண்ணி,
செல்இசை நிலைஇய பண்பின்,
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

ஓய்மான் நாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது.

# பரிபாடல்
## திருமால்

மாஅயோயே! மாஅயோயே!
மறுபிறப்பு அறுக்கும் மாசுஇல் சேவடி
மணிதிகழ் உருபின் மாஅயோயே!
தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்
ஞாயிறும். திங்களும், அறனும், ஐவரும்,
திதியின் சிறாரும், விதியின் மக்களும்,
மாசுஇல் எண்மரும், பதினொரு கபிலரும்,
தா மா இருவரும், தருமனும், மடங்கலும்,
மூஏழ் உலகமும், உலகினுள் மன்பதும்,
மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம்
மாயா வாய்மொழி உரைதர வலந்து;
'வாய்மொழி ஓடை மலர்ந்த
தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும்,
நீ' என மொழியுமால் அந்தணர் அருமறை.

'ஏஎர், வயங்கு பூண் அமரரை வௌவிய அமிழ்தின்,
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை ;
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளின்
நிவந்து ஓங்கு உயர் கொடிச் சேவலோய்! நின்
சேவடி தொழாரும் உளரோ? அவற்றுள்
கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை;
தீ செங் கனலியும், கூற்றமும், ஞமனும்,
மாசுஇல் ஆயிரம் கதிர் ஞாயிறும், தொகூஉம்
ஊழி ஆழிக்கண், இருநிலம், உரு கெழு
கேழலாய் மருப்பின் உழுதோய்' எனவும்,
மா விசும்பு ஒழுகு புனல் வறள அன்னச்
சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய் எனவும்,
ஞாலத்து உறையுள் தேவரும் வானத்து
நால் எண் தேவரும் நயந்து நிற்பாடுவோர்
பாடும் வகையே; எம் பாடல்தாம் அப்
பாடுவார் பாடும் வகை.

கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல்
எரி சினம் கொன்றோய்! நின் புகழ் உருவின, கை;
நகை அச்சாக நல் அமிர்து கலந்த
நடுவுநிலை திறம்பிய நயம் இல் ஒரு கை
இரு கை மாஅல்!
முக் கை முனிவ! நாற் கை அண்ணல்!
ஐங் கைம் மைந்த! அறு கை நெடு வேள் !
எழு கையாள! எண் கை ஏந்தல்!
ஒன்பதிற்றுத் தடக் கை மன் பேராள!
பதிற்றுக் கை மதவலி! நூற்றுக் கை ஆற்றல் !
ஆயிரம் விரித்த கைம் மாய மள்ள!
பதினாயிரம் கை முதுமொழி முதல்வ!
நூறாயிரம் கை ஆறு அறி கடவுள்!
அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்
இணைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை!
நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ,
முன்னை மரபின் முதுமொழி முதல்வ

நினக்கு - விரிந்து அகன்ற கேள்வி அனைத்தினும்
வலியினும், மனத்தினும், உணர்வினும், எல்லாம் -
வனப்பு வரம்பு அறியா மரபினோயே!
அணிநிழல் வயங்கு ஒளி, ஈர் - எண் தீம் கதிர்,
பிறை வளர், நிறை மதி உண்டி,
அணி மணிப் பைம் பூண், அமரர்க்கு முதல்வன் நீ;
திணி நிலம் கடந்தக்கால், திரிந்து அயர்ந்து, அகன்று ஓடி,
நின் அஞ்சிக் கடற் பாய்ந்த பிணி நெகிழ்பு அவிழ் தண்தார்
அன்னவர் பட, அல்லா அவுணர்க்கும் முதல்வன் நீ!
அதனால், 'பகைவர் இவர்; இவர் நட்டோர்' என்னும்
வகையும் உண்டோ, நின் மரபு அறிவோர்க்கே?
ஆயிர அணர் தலை அரவு வாய்க் கொண்ட
சேவல் ஊர்தியும், 'செங் கண் மாஅல்!
ஓ!' எனக் கிளக்கும் கால முதல்வனை!
ஏஎ இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்:

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ; ஆதலின்
உறையும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியல் சிறப்பின் மாயமார் அனையை;
முதல்முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்
பிறவாப் பிறப்பு இலை; பிறப்பித்தோர் இலையே:

பறவாப் பூவைப் பூவினோயே!
அருள் குடையாக, அறம் கோலாக,
இரு நிழல் படாமை மூஏழ் உலகமும்
ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ;
பாழ் என, கால் என, பாகு என, ஒன்று என,
இரண்டு என, மூன்று என, நான்கு என, ஐந்து என,
ஆறு என, ஏழு என, எட்டு என, தொண்டு என,
நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை:

செங் கட் காரி! கருங் கண் வெள்ளை!
பொன் கட் பச்சை! பைங் கண் மாஅல்!

இடவல! குட அல! கோவல! காவல!
காணா மரப! நீயா நினைவ!
மாயா மன்ன! உலகு ஆள் மன்னவ!
தொல் இயல் புலவ! நல்யாழ்ப் பாண!
மாலைச் செல்வ! தோலாக் கோட்ட!
பொலம் புரி ஆடை! வலம்புரி வண்ண!
பருதி வலவ! பொரு திறல் மல்ல!
திருவின் கணவ! பெருவிறல் மள்ள!

*மா நிலம் இயலா முதல் முறை அமையத்து,*
*நாம வெள்ளத்து நடுவண் தோன்றிய*
*வாய்மொழி மகனோடு மலர்ந்த*
*தாமரைப் பொகுட்டு நின் நேமி நிழலே!*

கடவுள் வாழ்த்து
கடுவன் இளவெயினார் பாட்டு
பெட்டனாகனார் இசை
பண்ணுப் பாலையாழ்